பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
22 11 2024 **FRIDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நைஜீரியா, பிரேஸில், கயானா நாடுகளில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லி புறப்பட்டார்.

2. கிருஷ்ணகிரியில் மண் மற்றும் நீர் பரிசோதனை நிலையத்தை மத்திய இணையமைச்சர் திரு. **Ravneet Singh Bittu** இன்று திறந்து வைத்தார்.

3. அத்திக்கடவு - அவினாசி திட்டத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 45 குளங்களில் 71-ஐ தவிர எஞ்சியவற்றிற்கு தண்ணீர் சென்றுள்ளதாக மாநில அமைச்சர் திரு. முத்துசாமி கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின் இணைப்புகளுக்கான எண்ணிக்கை குறைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக ராணுவ மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jaideep** தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மூன்று நாடுகள் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுதில்லி புறப்பட்டார்.

நைஜீரியா, பிரேஸில், கயானா ஆகிய நாடுகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பிரதமருக்கு, கயானா மற்றும் டொமினிக்காவின் உயரிய விருதும் வழங்கப்பட்டது.

>>>>><<<<<

தேசிய கல்விக் கொள்கையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இல்லம் தேடி வேலை தொடர்பான அறிக்கையை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவுடன் இணைந்து வெளியிட்டு அவர் பேசினார்.

பள்ளிகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க, தேசிய கல்விக் கொள்கையில் வகைசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் வகையில், இந்தப் பயிற்சி வழங்கப்படுவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

**>>>>><<<<<**

தமிழகத்தின் வளர்ச்சிக்காக பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக ரயில்வே இணையமைச்சர் திரு. **Ravneet Singh Bittu** கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரியில் மண் மற்றும் நீர் பரிசோதனை நிலையத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று திறக்கப்பட்டுள்ள மண் மற்றும் நீர் பரிசோதனை மையத்தை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

**>>>>><<<<<**

அத்திக்கடவு - அவினாசி திட்டத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 45 குளங்களில் 71-ஐ தவிர எஞ்சியவற்றிற்கு தண்ணீர் சென்றுள்ளதாக மாநில அமைச்சர் திரு. முத்துசாமி கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 101 குளங்களில் நீர் முழுமையாக நிரம்பியுள்ளதாக தெரிவித்தார்.

71 குளங்களுக்கு நீரை கொண்டு செல்வதில் உள்ள பிரச்சினைகள் விரைவில் களையப்படும் என்றும் திரு. முத்துசாமி கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் வீடுகளில் தறிகளை வைத்து நெசவுத்தொழில் செய்துவரும் நெசவாளர்களுக்கு திமுக அரசு தொழில்வரி விதிக்க முற்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் இதுபோன்ற தறிக்கூடங்களை மாநகராட்சி ஊழியர்கள் அளவீடு செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற கணக்கீடு செய்யும் பணியினை திமுக அரசு கைவிட வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின் இணைப்புகளுக்கான எண்ணிக்கை குறைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இதுவரை 15 ஆயிரம் இணைப்புகள் மட்டுமே வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நீர் நிலைகள் உரிய முறையில் தூர்வாராத காரணத்தால், விவசாயிகள் கிணற்றை மட்டுமே நம்பியுள்ள நிலையில், அதற்கான மின்சார இணைப்புகளையும் குறைப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்ஐசி-யின் சிறிய தொழில்நுட்பக் கோளாறை பெரிதுபடுத்தும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், விவசாயிகளின் துயரை களைய மறுப்பது ஏன் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் வினவியுள்ளது.

>>>>><<<<<

நியாயவிலைக் கடைகளில் துவரம் பருப்புக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நவம்பர் மாதத்திற்கான துவரம் பருப்பு இதுவரை வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு உட்பட்ட நியாயவிலைக் கடைகளில் தங்குதடையின்றி துவரம் பருப்பு வழங்கப்படுவதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ராமதாசு அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவிற்கு இந்திய உணவு பாதுகாப்பு அமைப்பின் தரச்சான்று கிடைத்துள்ளதாக, அதன் டீன் திரு. தேரணிராஜன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - தேரணிராஜன் 57 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

வங்கக்கடலில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை (1) 20 செகண்ட்ஸ்)

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை (2) 53 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருச்சியில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

ராணிப்பேட்டை மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஆட்சியர் திருமதி. சந்திரகலா தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், செங்கோடம்பாளையம் கிராமத்தில் நடைபெற்ற கால்நடைகளுக்கான மருத்துவ முகாமை, ஆட்சியர் திருமதி. உமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் இளையோரை அதிக எண்ணிக்கையில் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான சிறப்பு முகாம் ஆட்சியர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

மதுரையில் முப்படை ஓய்வூதியதாரர்களின் குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டத்தில் தூய்மை இந்தியா இயக்கம் தொடர்பான விழிப்புணர்வு பேரணி, அஞ்சல் துறை சார்பில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

தேனி, கும்பக்கரை அருவியில் நீர்வரத்து சீரானதை அடுத்து, நான்கு நாட்களுக்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு இன்று முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக ராணுவ மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jaideep** தங்கப்பதக்கம் வென்றார்.

**Armenia-**வின் **Yerewan-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 74 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி ஸ்வீடனில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Syndrela Das, Divyanshi** உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 21-16, 21-19 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் **Kim Astrup – Anders Skaarup Rasmussen** இணையை வென்றது.

>>>>><<<<<

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா, முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 67 ரன் எடுத்துள்ளது.

**Perth-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், **Alex Carey** 19 ரன்னுடனும், **Mitchell Starc** 6 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

பும்ரா அபாரமாக பந்து வீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முன்னதாக, டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா முதல் இன்னிங்ஸில் 150 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**>>>>><<<<<**

**Iceland-**ல் நடைபெற்ற உலக வலு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் பிரித்வி சென் குப்தா வெண்கலப்பதக்கம் வென்றார்.

**>>>>>END<<<<<**